விலை: 40.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 110 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 25 வெள்ளிக்கிழமை (08.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## 'கோட்டா வீட்டுக்குப் போ'

### தலவாக்கலையில் மாபெரும் பேரணி



(தலவாக்கலை)

"கோட்டா வீட்டுக்குப் போ" என்ற கோஷத்தோடு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்பாடு செய்திருந்த மாபெரும் எதிர்ப்புப் பேரணி தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்றது. 15

## மணியந்தோட்டத்தில் பெண் படுகொலை

### வீட்டுக்குப் பின்னால் புதைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மணியந்தோட்டத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்து புதைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் 15

## அலரிமாளிகையை முற்றுகையிட்டு
# பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டம்

### ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர் மீது தாக்குதல் நடத்தியதால் குழப்பம்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அலரிமாளிகை முன்னால் நேற்றிரவு ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நபர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதால் குழப்ப நிலை ஏற்பட்டது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## அனைவரும் பதவி விலக வேண்டும்

### விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

பிரதமர் உட்பட அனைவரும் பதவி விலகி புதிய இடைக்கால அரசாங்கத்திற்கு செல்லுமாறு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய அவர், சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய 15

### 11, 12 அரச விடுமுறை

## சனி முதல் 9 நாட்கள் தொடர் விடுமுறை

(கொழும்பு)

அடுத்த வாரம் இரண்டு பொது விடுமுறை தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 11, 12ஆகிய திகதிகள் அரச விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளரி 15

## மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு

### பகிரங்கமாக மன்னிப்பு கோரினார் அலி சப்ரி



(கொழும்பு)

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள இன்னல்களுக்கு தனிப்பட்ட முறையில் தான் மன்னிப்பு கோருவதாக முன்னாள் அமைச்சரும் தற்போதைய 15

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அகற்றப்படும்

### அரசுக்கு எதிரான போராட்டத்தில் சஜித்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள் 15

## கோட்டா பதவி விலகினால் மட்டுமே எமது ஆதரவு

### ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

அரச தலைவர் பதவி விலகினால் மாத்திரமே தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண தமது கட்சி ஆதரவளிக்கும் என அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அரச தலைவர் ஆசனத்தில் இருந்துகொண்டு கோட்டாபய ராஜபக்ஷ வழங்கும் எந்தவொரு தீர்வையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். 15

## வட்டுக்கோட்டையில் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையில் மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராலி செட்டியார்மடம் பகுதியைச் சேர்ந்த புலோஷாந்த் (வயது - 15



உங்கள் வலம்புரியில்
இன்று முதல்
வியாழ மாற்றம்
வாசிக்கத் தவறாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்காலத் தீர்வை தமிழர் தலையில் கட்டினால் உலகத் தமிழினம் ஒன்றிணைந்து முறியடிக்கும்



## காசி ஆனந்தன் காட்டம்

(சென்னை)

**இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி "இடைக்காலத் தீர்வு" எதையும் ஈழத் தமிழர்கள் தலையில் கட்டியடிக்க இலங்கை அரசோ - அல்லது அரசுக்கு முண்டு கொடுக்கும் இயலாத் தமிழ் தலைமைகளோ இக்காலகட்டத்தில் முடிவு செய்தால், அத்தகைய திட்டத்தை உலகெங்கும் பரவிக்கிடக்கும் ஈழத் தமிழினம் முறியடிக்கும் என ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் கவிஞர் காசி ஆனந்தன் இடித்துரைத்துள்ளார்.**

நாட்டின் நெருக்கடி நிலைக்கு மத்தியில் அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மனிதநேய அடிப்படையில் இந்தியா இக்காலகட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்குவதை எதிர்த்து எந்த மாற்றுக் கருத்தையும் நான் வெளியிடமாட்டேன். ஆனால் இலங்கையில் வாழும் சிங்களவர்கள் எல்லாக் காலங்களிலும் இந்தியாவின் எதிரிகளாகவே இருக்கிறார்கள் என்பதை இந்தியா நினைவில் இருத்த வேண்டும்.

தலைமை யாராயினும் இலங்கையில் அது சிங்களத் தலைமை தானே என்பதில் மாற்றமில்லை.

நாகபாம்பு என்றோ - விரியன் பாம்பு என்றோ - கருவேலம் பாம்பு என்றோ பெயர்கள் வேறுபடலாம்-ஆனால் பாம்புகள் பாம்புகளே என்பதை நாம் மறந்துவிடலாமா என்ன?

இலங்ககையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகயைப் பயன்படுத்தி 'இடைக் காலத் தீர்வு' எதையும் ஈழத் தமிழர் தலையில் கட்டியடிக்க இலங்கை அரசோ- அல்லது இலங்கை அரசுக்கு முண்டு கொடுக்கும் இயலாத் தமிழ்த் தலைமைகளோ இக்கால கட்டத்தில் முடிவு செய்தால்- அத்தகைய திட்டத்தை உலகெங்கும் பரவிக்கிடக்கும் ஈழத் தமிழினம் முறியடிக்கும் என்பதை இடித்துரைக்க விரும்புகிறோம்.

இடைக்காலத் தீர்வு என்பது ஈழத் தமிழர் தீர்வு இல்லை. 'நிரந்தர தீர்வே' தமிழர்களின் எதிர்பார்ப்பு எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# கோட்டா, மகிந்தவை விட ஆதிவாசி தலைவர் செயற்திறனுடையவர்

## சபையில் ரோஹினி விஜேரத்ன



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமரை விட இலங்கை ஆதிவாசி இனத் தலைவர் சிறந்த தலைவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினையை யாரேனும் ஒருவரை அழைத்து தீர்க்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாய்பலத்தைக் காட்டாது மூளையின் பலத்தைக் காட்ட வேண்டிய நேரம் இது என ரோஹினி விஜேரத்ன தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்து பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும்போதே திருமதி ரோஹினி விஜேரத்ன இவ்வாறு தெரிவித்தார். (ம)

# தங்கத்தின் விலையில் தொடர்ந்து வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தங்கத்தின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, நேற்று கொழும்பு செட்டித்தெருவில் தங்கத்தின் விலை கணிசமான சரிவைக் கண்டது.

அதன்படி, 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 166, 000 ரூபாயாகும். மற்றும் 24 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை 180,000 ரூபாயாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கோவிட் தொற்றால் மேலும் இருவர் பலி

நாட்டில் மேலும் இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட பெண்ணொருவரும் ஆணொருவருமே உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16,488 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# வார இறுதி நாட்களில் மின்தடை நேரம் குறைப்பு

(கொழும்பு)

வார இறுதி நாட்களில் மின்தடையினை ஏற்படுத்துவதில் நேரக் குறைப்பை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வார இறுதி நாட்களில் நாட்டில் மின்வெட்டினை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, நாளை சனிக்கிழமை இரண்டு மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு மணித்தியாலம் மாத்திரமே மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (ம)


## பதவி வெற்றிடங்கள்

**பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களையும் பட்டதாரிப் பயிலுநர்களாகப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களையும் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவைக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2022**

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.05.18 ஆகும்.

ஆட்சேர்ப்பு விபரம் மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவற்றை **www.np.gov.lk → Recruitment and Exam → Advertisment** என்ற வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் கட்டளைப்படி.

**சி.திருவாகரன்,**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**07.04.2022**

(C-4137)


# மன்னாரில் அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன போராட்டம்

## அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு

(மன்னார்)

அரசாங்கத்திற்கு எதிராகவும், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னாரில் மாபெரும் கண்டன போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கண்டன போராட்டம் காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம்பெற உள்ளது.

சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் இணைந்து குறித்த கண்டன போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

எனவே குறித்த போராட்டத்தில் வர்த்தகர்கள், பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு ஏற்பாட்டுக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்! போராட்டம்! போராட்டம்!



தலவாக்கலையில்...



நல்லூரில்...



கண்டியில் கறுப்பு உடையுடன் மாணவர்கள்...



சரத்பொன்சேகா தலைமையில்...



சுழிபுரத்தில் இளைஞர்கள்...



தெல்லிப்பழையில்...



பசறையில்...



ஊர்காவற்றுறையில் மருத்துவமனை ஊழியர்கள்...



வட்டுக்கோட்டையில்...



அப்புத்தளையில்...



வவுனியாவில்...



மன்னாரில்...




கொழும்பு பஞ்சீகாவத்தையில்...

(நி-5-33-104-250-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட் கம்மின்ஸ் அதிரடி

# மும்பையை பந்தாடியது கொல்கத்தா



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 14 ஆவது லீக் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

புனே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 161 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சூர்யகுமார் யாதவ் 52 ஓட்டங்களையும் திலக் வர்மா ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், பெட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 162 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 16 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பெட் கம்மின்ஸ் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சில், டைமல் மில்ஸ் மற்றும் முருகன் அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டேனியல் சேம்ஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 15 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த பெட் கம்மின்ஸ் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2553

**பிரதாப்**

அந்த இரண்டு நாள் என்ன சொல்லி லீவு எடுக்கலாம்?




**கமலி**

தோல்விகள் ஒவ்வொன்றும் ஒரு பாடத்தை கற்றுத் தருகின்றன. ஒரு நாள் நாம் தோல்விக்கு கற்றுத் தருவோம் "வெற்றி" என்ற பாடத்தை.



**ஐங்கரன்**

அக்கால எமது ஆசிரியர்கள் அடித்த அடியை மனித உரிமையில் முறையிட்டிருந்தால் அவர்கள் இன்றும் சிறையில் இருந்திருப்பார்கள்...
அவர்கள் அவ்வாறு அடிக்கவில்லை என்றால் நாம் இன்றும் சிறையில் இருந்திருப்போம்.



**மீனா**

எதிர்வீட்டு மாமிகிட்ட ஒரு மணிநேரம் பேசியதில் வயிற்றெரிச்சல் தான் மிச்சம்... ஏன்?



நெக்லஸ் புதுசா என்று கடைசிவரை கேட்கவே மாட்டேன்னுட்டா பாவி...

**கபில்ராஜ்**

ஆமா! எதுக்காக உங்க வீட்டு "ஹவுஸ்" ஓனரை கொலை செய்தாய்?



அவர் தானையா எப்ப பார்த்தாலும் காலி பண்ணு ... காலி பண்ணுனு சொன்னாரு...!

**ஜானுசா**

கொலையை நிருபிக்க ஒரு சாட்சி போதுமாம்... பதிவுத் திருமணத்துக்குத்தான் 2 சாட்சிகள் வேணுமாம்...



கொலை பண்றதை விட ஆபத்தானதுதான் போல கல்யாணம் பண்றது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த இராணுவ செலவீனங்களே பொருளாதார நெருக்கடிக்கு காரணம்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

(லண்டன்)

இன்று இலங்கைத்தீவு எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு சிங்கள அரசின் தமிழ்மக்களுக்கு எதிரான இனவழிப்புப்போரும், பெருந்தொகை பணம் இராணுவச்செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தமையும் கூட முக்கிய காரணிகளாக அமைகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவின் இன்றைய பொருளாதார நெருக்கடி குறித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இப்பொருளாதார. நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் பொருந்தொற்று, அதனால் ஏற்பட்ட சுற்றுலாத்துறை வீழ்ச்சி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் ஏற்பட்ட பாதிப்பு, ஸ்ரீலங்காவின் வரிக்குறைப்பு மற்றும் விவசாயத்தில் ஏற்படுத்தப்பட்ட உர மாற்றீடுகள் என இன்னோரன்ன காரணங்கள் கூறப்பட்டாலும், தமிழின அழிப்புப் போரும், பெரும் இராணுச் செலவீனமும் இந் நெருக்கடி ஏற்படுவதற்கு முக்கிய பங்கு வகித்தமையினை சிங்கள மக்களும், அனைத்துலக சமூகமும் கவனத்தில் எடுக்கவில்லை என்பதனை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக சிங்கள அரசு நடத்திய கொடிய இனவழிப்பு யுத்தத்துக்கும் முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கும், அதனைத் தொடர்ந்து தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து தமிழர்களை அடக்கி வைக்கவும், கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்கு தமிழர் தேசத்தினை உள்ளாக்கவும் ஸ்ரீலங்கா அரசு பெரும் இராணுவச் செலவீனங்களைச் செய்து வந்தது. தொடர்ந்தும் செய்து வருகி றது.

பொருளாதார நெருக்கடி, வாழ்வாதார பிரச்சனை காரணாமாக வீதிக்கு இறங்கி போராடி வரும் சிங்கள உறவுகளை தோழமையோடு காண்கின்றோம். ஆனால் ஆட்சி மாற்றம் என்பது இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக அமையாது என்பதனை தெரிவிப்பதோடு நிலையான தீர்வு என்பது தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படும் போதே நிகழும் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திருமதி. **திலகவதி மாணிக்கவாசகர்**

பிறப்்பு
23.03.1944

இறப்பு
08.04.2017



ஆண்டைந்து இங்கே
ஓடியே போனதம்மா
மீண்டுமொருமுறை எம்மை
தேடியே வருவாயோ!
வேண்டாமலே எமக்கு
பெருவரமாய் வந்தவளே
வேண்டியேங்குவதும்
உன் திருமுகம் தான்
அம்மா!

குடும்பத்தினர்
குருக்கள் பகுதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
(10941)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1965 | 2022 |
| 10 | 02 |
| 29 | 25 |

## அமரர். கந்தசாமி இளந்திரையன் (ரகு)

கடந்த (25.02.2022) வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர்.**கந்தசாமி இளந்திரையன்** (ரகு) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.04.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், சபிண்டீகரண கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் (10.04.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து ஆற்றுதல் கூறியோர், தொலைபேசியூடாகவும், சமூக ஊடகங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோர், பதாகைகள், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டவர்கள் மற்றும் விபத்து நடைபெற்ற சமயத்தில் இருந்து இறுதி ஊர்வலம் வரை உடனிருந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

முல்லையடி,
பளை.
(10931)
குடும்பத்தினர்


# இராசிபலன்

08.04.2022
பங்குனி 25, வெள்ளிக்கிழமை
சப்தமி முன்னிரவு 9.57 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 12.37 மணிவரை
சுபநேரம்- 6.07-7.37 மணிவரை
இராகுகாலம் -10.37-12.07 மணிவரை

சந்திராஷ்டமம்-
அனுசம், கேட்டை

**வளவன்**




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.




தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ரோக பயமுண்டு.




உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் பயணங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கனவு பலிதமுண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் விவசாயிகள் போராட்டம்



(முறிகண்டி)
கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் நேற்று கவனயீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

சிறுபோக செய்கைக்கு கடந்த காலங்களை போன்றல்லாது இம்முறை நீர் வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டமையை கண்டித்தும், சிறுபோக செய்கைக்கான நீரை முழுமையாக வழங்குமாறு தெரிவித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் காலை கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் அமைந்துள்ள நீர்பாசன திணைக்களம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது.

இதன்போது விவசாயிகளால் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (4-5-100)



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையினால் எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகம் தொடர்பான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

# நெல்லியடியில் திருடர்கள் கைவரிசை

(கரணவாய்)
நெல்லியடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள இரண்டு வெவ்வேறு இடங்களில் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை வேளையில் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நெல்லியடிப்பகுதியில் உள்ள ஓட்டுத் தொழிற்சாலை மற்றும் பூட்டியிருந்த வீடு என்பவற்றிலேயே குறித்த திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் பெருந்தொகையான பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (4-5-60)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் நோர்வேயின் பேர்கன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையில் உயர்மட்ட ஆய்வு நடவடிக்கைகளுக்கான முக்கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி யாழ். பல் கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# துவிச்சக்கர வண்டிகள் திருட்டு


(அராலி)
யாழ்ப்பாணம் கல்வியங்காடு மதுபானசாலையில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு துவிசக்கரவண்டிகள் இனம் தெரியாத திருட்டு கும்பலால் திருடப்பட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவது,

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு மதுபானசாலையில் மின்சாரம் தடைபட்டிருந்த நேரத்தில் மதுபானம் வாங்கச் சென்ற இருவருடைய துவிசக்கர வண்டிகள் இனம் தெரியாத திருட்டு கும்பலால் திருடப்பட்டுள்ளது.

யாழில் மின் தடையை சாதகமாக பயன்படுத்தி இவ்வாறான பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-104)

## கடந்த 10.03.2022 அன்று ஆண்டவர் அடி சேர்ந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கின் விண்ணக நித்திய வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



பிறப்பு
15.03.1969

இறப்பு
10.03.2022

அமரர்.திருமதி. ஜெகதீஸ்வரன்

# சந்திரவதனி (வதனி)

ஆசிரியை சென் ஜேம்ஸ் வித்தியாலயம் [குருநகர்]

அவர்களின் மறைவை கேள்வியுற்றதும் எமது இல்லம் நோக்கி விரைந்தோடி வந்து திக்கற்று நிலை குலைந்து சோகத்தில் மூழ்கி போயிருந்த எமக்கு தோள் கொடுத்து உதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் முதற்கண் எமது ஆழமான நன்றிகள். எமது குடும்பத் தலைவி எம்மை விட்டுப் பிரிந்த செய்தியினை கேள்வியுற்றதும் நேரிலும் தொலைபேசியூடாகவும் சமூக வலைத்தளங்களூடாகவும் எம் துயரத்தில் பங்கேற்றவர்களுக்கும் எமது நன்றிகள். இறுதிச்சடங்கின் போது நேரடியாக எம் இல்லம் வந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், யாழ்/சென் ஜேம்ஸ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ்/மத்திய கல்லூரி கல்விச் சமூகத்தினர், யாழ்/பல்கலைக்கழக சமூகத்தினர், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். எமது குடும்ப விளக்கின் பூதவுடலை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பார்வையிட சமூக வலைத்தளங்கள் ஊடாக பங்கேற்றவர்களுக்கும் மலர் வளையங்கள், பூமாலைகள் சாத்திய அன்புள்ளங்களுக்கும் பதாகைகள் கட்டியவர்களுக்கும் சமூக வலைத்தளங்களிலும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் இறுதிச் செய்தியை பகிந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் காலம் அறிந்து எமக்கு உணவளித்த அன்பர்களுக்கும் எமது நன்றிகள்.

**இவ்வழைப்பை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு எதிர்வரும் 09.04.2022 சனிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

10940

இல. 29 கன்னியர் மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

07[illegible] 618 5563

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 119.08 பில்லியன் ரூபாயை அச்சிட்டது மத்திய வங்கி

(கொழும்பு)

கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரித்த பண புழக்கத்திற்கு மத்தியில் மத்திய வங்கி நேற்று முன்தினம் புதன் கிழமை 119.08 பில்லியன் ரூபாயை அச்சடித்துள்ளது.

இந்த வருடத்தில் மட்டும் இதுவரை 432.76 பில்லியன் ரூபாய் பணம் இலங்கை மத்திய வங்கியினால் அச்சிடப்பட்டுப்பட்டுள்ளது. (நி-5)

# பாராளுமன்றம் வந்தார் ஜனாதிபதி கோட்டா



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்ற அமர்வுகளை பார்வையிடுவதற்காக சபைக்கு நேற்று வியாழக்கிழமை வருகை தந்தார்.

பாராளுமன்றத்திற்கு வந்த ஜனாதிபதியை அரசாங்கத்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கரவொலி எழுப்பி வரவேற்றிருந்ததோடு எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# எனது வீட்டை முற்றுகையிட்டால் தாக்குதல் நடத்துவேன்- சாகர சூளுரை

(கொழும்பு)

எனது வீட்டை யாரேனும் முற்றுகையிட வந்தால் தாக்குவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கரு த்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

# பாராளுமன்ற சம்பளத்தை துறந்தார் ஹரின்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தனது ஒரு வருட கால சம்பளத்தை உத்தியோகபூர்வமாக நேற்று துறந்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வாக்குறுதியளித்தபடி தனது பாராளுமன்ற சம்பளத்தை உத்தியோகபூர்வமாக கைவிடுவதாக அறிக்கையொன்றை வெளியிட்டார்.

மக்களின் ஊழியர்களாகிய நாம் நமது நாட்டின் நெருக்கடிகளை குறைக்க இந்த கடினமான காலங்களில் எம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். (நி-5)

# கோதுமை மாவின் விலையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை மேலும் 50 ரூபாவினால் அதிகரிக்க கோதுமை மா நிறுவனங்கள் தயாராகி வருவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா நிறுவனங்கள் அண்மையில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 ரூபாவினால் அதிகரித்துள்ளன.

இன்றைய நாட்களில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 180 ரூபாவாக உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார். (நி-5)

# 76,000 மெற்றிக் தொன் எரிபொருட்கள் இலங்கை வந்தடைந்தன

(கொழும்பு)

இலங்கைக்கு 76,000 மெட்ரிக் தொன் எரிபொருட்கள் இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 36,000 மெட்ரிக் தொன்பெற்றோல் மற்றும் 40,000 மெட்ரிக் தொன் டீசல் கடந்த செவ்வாய்க்கிழமையும் நேற்று முன்தினம் புதன்கிழமையும் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

இந்திய கடன் வசதியின் கீழ் இதுவரையில், 270, 000 மெட்ரிக் தொன் எரி பொருட்கள் இலங்கைக்கு வழங்கப்பட் டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (நி-5)

# மேலதிக வரி சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேறியது!

(கொழும்பு)

ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் மேலதிக வரி சட்டமூலம் திருத்தங்களுடன் நேற்று வியாழக் கிழமை பாராளுமன்றில் நிறைவேற் றப்பட்டுள்ளது.

2000 மில்லியன் ரூபாய் க்கு அதிகமாக வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக வரியை அறவிட அரசாங்கம் தீர்மானித்தது.

அதன்படி ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25 சதவீத மேலதிக வரி தொடர்பான குறித்த சட்ட மூலத்திற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது.

இதனை அடுத்து குறித்த சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது என உத்தர விடக் கோரி எதிர்க்கட்சிகள் உயர் நீதிமன்றத்தை நாடியிருந்தன.

இருப்பினும் மேலதிக வரிச் சட்டமூலத்தில் ஈ.பி.எப், ஈ.ரி.எப் (EPF,ETF) உட்பட 13 நிதியங்கள் உள்ளடக்கப்படாத வகை யில் திருத்தம் செய்யப்படும் என சட்டமா அதிபர் உறுதியளி த்திருந்த நிலையில்,

மேலதிக வரிச் சட்ட மூலம் அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என உயர் நீதி மன்றம் கடந்த மாத இறுதியில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கேள்வி அறிவித்தல்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)- 2022

### உள்ளூராட்சி திணைக்களம்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான சீடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule 5)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020, 03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிகளின் பொது நிதி சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036,E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை 08.04.2022 ஆம் திகதியிலிருந்து 28.04.2022 ஆம் திகதிவரை ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 8.04.2022 ஆம் திகதியிலிருந்து 28.04.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 28.04.2022 திகதி மாலை 14.30 மணிக்குமுன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் (எழுபத்தேழு நாட்கள்- 13.07.2022 வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத்தொகை VAT நீங்கலாக(Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3) /PL/PSDG/w /1/2022 | Construction of Thannadchi road | 8.33 Mn | 60 நாட்கள் | C7and C6 (வீதி) | 90,000.00 | 11.08.2022 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 20.04.2022 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப் பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

(சி-4136)

தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.
08.04.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 15

# கொடுப்பதற்கு பணக்காரனாய் இருக்க வேண்டுமென்பதல்ல...



உலக மகா பணக்காரர்-கொம்பியூட்டர் உலகின் பேரரசன் பில் கேட்ஸிடம் ஒருவர் கேள்வி கேட்கி றார்.

உங்களை விடவும் பண க்காரர் எவராவது இருக்கி றாரா?

அவரிடம் இருந்து பதில் வருகிறது. ஆம், ஒருவர் இருக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் வேலை பார்த்துக்கொண்டிருந்த கம்பனியில் இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டேன்.

நியூயோர்க் நகர விமான நிலையத்தில்

நாளிதழ்களில் என்னவெலாம் தலைப்புச் செய்தி வந்திருக்கிறது என்று பார்த்துக் படித்துக் கொண்டிருந்தேன்.

நாளிதழ் ஒன்றினை விரும்பி வாங்கலாம் என நினைத்தேன்.

ஆனால், என்னிடம் சில்லறை நாணயம் இல்லை. எனவே, அதை வாங்கவில்லை.

அப்போது அதைக் கவனித்த பேப்பர் விற்கும் ஒரு கறுப்பினச் சிறுவன், என்னை அழைத்து, அந்த நாளிதழ் பிரதியைக் கொடுத்தான்.

என்னிடம் சில்லறை இல்லை எனக் கூறினேன். அவன் பரவாயில்லை, இலவசமாகக் கொடுக்கிறேன் என்றான்.

மூன்று மாதங்கள் கழித்து, மீண்டும் அங்கு சென்றேன்.

மறுபடியும், அதே கதை நடந்தது. அந்தச் சிறுவன் நாளிதழை இலவசமாகக் கொடுத்தான்.

ஆனால், நான் வாங்க மறுத்தேன். பேப்பர் விற்கும் கறுப்பினச் சிறுவன் தனக்கு வந்த அன்றைய இலாபத்திலிருந்து தருவதாகக் கூறிக் கொடுத்தான்.

இந்தச் சம்பவம் நடந்து 19 வருடங்கள் ஆகிய நிலையில் நான் பணக்காரன் ஆகிவிட்டேன்.

எனக்கு திடீரென அந்தச் சிறுவனைக் காணும் ஆவல் வந்தது.

ஒன்றரை மாதத் தேடுதலுக்குப் பின் அவனைக் கண்டு பிடித்தேன்.

அவனைக் கேட்டேன்.

"என்னைத் தெரிகிறதா?"

"தெரிகிறது. நீங்கள் புகழ் வாய்ந்த "பில்கேட்ஸ்"

பல வருடங்களுக்கு முன்னர், இரண்டு முறை இலவசமாக நாளிதழ்களை வழங்கினாய் எனக் கூறினேன். தற்போது அதற்காக, நீ என்னவெல்லாம் விரும்புகிறாயோ, அவற்றைக் கைமாறாகத் தர விரும்புகிறேன் என்றேன்.

உங்களால் அதற்கு ஈடு செய்ய முடியாது என்றான் அந்தக் கறுப்பு இளைஞன்...

ஏன்? என்றேன் நான்.

அந்த இளைஞன்

"நான் ஏழையாய் இருந்த போது, உங்களுக்குக் கொடுத்தேன்"

ஆனால், நீங்கள் பணக்காரர் ஆன பின்னே எனக்குக் கொடுக்க வருகிறீர்கள்.

"ஆகவே, நீங்கள் இதனை எவ்வாறு சரிக்கட்ட முடியும்" என்றான்...

அந்த வேளையில் கறுப்பு இளைஞன் தான் என்னை விட பணக்காரன் என்பதை உணர்ந்தேன்" என்றார் பில்கேட்ஸ்.

"கொடுப்பதற்கு நீ பணக்காரனாக இருக்க வேண்டுமென்பதோ, பணக்காரன் ஆகும் வரை காத்திருக்க வேண்டும் என்பதோ கிடையாது...."

"உதவ வேண்டும் என்ற குணத்திற்கு கால, நேரம் அல்லது ஏழை, பணக்காரன் என்பது கிடையாது"

"மகிழ்வித்து மகிழ்வோம்..."

## ஓமிக்ரோனுக்கு புதிய தடுப்பூசி

### விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(ஆஸ்திரியா)

ஆஸ்திரியா நாட்டில் ஓமிக்ரோன் உள்ளிட்ட சார்ஸ்-கோவ்-2 வகைகளுக்கு எதிராக புதிய தடுப்பூசியை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். ஏற்கனவே தடுப்பூசி போட்டு நோய் எதிர்ப்புச்சக்தி பெறாதவர்களுக்கும் இந்த தடுப்பூசி பலன் அளிக்கும்.

வியன்னா மருத்துவ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள இந்த தடுப்பூசி, ஆர்.பி.டி. என்று அழைக்கப்படுகிற வைரசின் ஏற்பி பிணைப்பு களங்களை குறி வைக்கிறது.

விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் இந்த தடுப்பூசியை செலுத்தி பரிசோதித்ததில் இது நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குவது தெரிய வந்துள்ளது.

இந்த நோய் எதிர்ப்புச்சக்தியானது, உடல் செல்களுக்குள் வைரஸை நுழைய விடாமல் தடுக்கிறது. இதனால் தொற்று ஏற்படாது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். போதுமான நிதி கிடைத்தால், ஒப்புதலுக்கு தேவையான முதல் மருத்துவ பரிசோதனைகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ரி-5)

# உக்ரை...

# முழுமை...

## பென்டக...


(கீவ்)

உக்ரைனின் கீவ் மற... படைகள் முற்றிலுமா... அறிவித்துள்ளது.

இந்த நகரங்களில் இருந்து வெளியேறிய ரஷ்யப் படைகள் பெலாரஸ் மற்றும் ரஷ்யாவில் மீண்டும் ஒருங்கிணைத்து வருவதாக பென்டகன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் போரில் கொல்லப்பட்ட தங்கள் உறவுகளின் இறுதிச்...

# உலகின் மிகப்பெரி... கும்பாபிஷேகத்...



# புடினின் மகள்க... அமெரிக்கா தடை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரைன் தலைநகரில் இருந்து

# மையாக வெளியேறிய ரஷ்ய படைகள்

## டகன் அறிவிப்பு

**வ் மற்றும் செர்னி ஹிவில் இருந்து ரஷ்ய லுமாக வெளியேறிவிட்டதாக பென்டகன்**

சடங்குகளை செய்யவும், கொன்று புதைக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டறியவும் இந்நகரவாசிகள் முயன்று வருகின்றனர்.

இதேவேளை, கீவ் மற்றும் செர்னி ஹிவ் நகரங்களில் இருந்து ரஷ்ய படைகள் முற்றிலுமாக வெளியேறி விட்டதை அங்குள்ள தமது செய்தியாளர்களும் உறுதி செய்துள்ளதாக வோஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

எனினும் துருப்புக்கள் வெளியேறி மீண்டும் ஒருங்கிணைந்து வருவதால் தலைநகர் கீவ் மீதான தாக்குதல் அச்சம் இன்னும் நீங்கவில்லை என பென்டகன் எச்சரித்துள்ளதாகவும் வோஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.



ரஷ்யப் படைகளில் உக்கிர தாக்குதல்களால் அழிக்கப்பட்ட தலைநகரம் தற்போது மெல்ல இயல்புக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளது. நகரில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் அங்கு திரும்பத் தொடங்கியுள்ளதாக அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ரஷ்ய படைகள் தலைநகர் கீவ்வில் இருந்து வெளியேறிய பின்னர் அங்கு ரஷ்யப் படைகளால் கொன்று புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் 410 பொது மக்களின் உடல்களை இது வரை மீட்டுள்ளதாக உக்ரேனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# ரிய முருகன் சிலை

# ந்தின் பின் திறப்பு

(டில்லி)

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உலகின் மிகப்பெரிய முருகன் சிலை, கும்பாபிஷேகத்திற்கு பின் திறக்கப்பட்டது. புத்திரகவுண்டன் பாளையத்தில் உலகிலேயே மிக உயரமான, 146 அடி உயர ஸ்ரீமுத்து மலை முருகன் சிலை 4 வருடங்களாக அமைக்கும் பணி நடைபெற்று வந்த நிலையில், அதன் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

இதில், திருவாரூர் சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் ஆறுபடை முருகன் கோவில் குருக்கள் கலந்து கொண்ட நிலையில் மங்கள வாத்தியங்கள் முழங்க பல்வேறு ஊர்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் வைத்து பூஜை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின் போது ஹெலிகாப்டர் மூலம் பூக்கள் தூவப்பட்ட நிலையில் பெரும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு முருகனை வழிப்பட்டு சென்றனர். (நி-5)

# மனிதாபிமான உதவி பெற

## வரிசையில் நிற்கும் உக்ரைன் மக்கள்

(கீவ்)

உக்ரைன் நாட்டின் மரியுபோல் நகரில் மனிதாபிமான உதவிகள் பெறுவதற்காக மக்கள் நீண்ட தூரம் வரிசையில் நிற்கும் காட்சிகள் வெளியாகி உள்ளன.



இந்த நகரில் ரஷ்யாவின் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பு 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்துள்ளனர். ஆனால் தற்போது இந்த நகரம் முற்றிலுமாக அழிந்து போன நிலையில் உள்ளது.

அங்கு வசிக்கும் மக்கள் உணவு, இருப்பிடம், குடிநீர் உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதியுமின்றி அல்லல்பட்டு வருகின்றனர்.

அந்த நகரில் இருந்து வாகனங்கள் மூலம் வெளியேறும் வழிகள் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# களுக்கு

# ட உத்தரவு

(வோஷிங்டன்)

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு பொருளாதார தடை விதித்தது. இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடினின் மகள்களுக்கு எதிராகவும் அமெரிக்கா தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

புடினின் மகள்களான மரியா புதினா, கேட்டரினா டிக்கோனோவா ஆகியோர் அமெரிக்க நிதி அமைப்பில் பரிமாற்ற நடவடிக்கை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அமெரிக்காவில் சொத்துக்கள் இருந்தால் அவைகள் முடக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்ய பிரதமர் மினகல் மிகஷ்டின், வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவின், குடும்பத்தினர், முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெத்வடேல் ஆகியோருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ரஷ்யாவின் ஸ்பெர், ஆல்பா வங்கிகள் அமெரிக்க நிதி அமைப்பை தொடர்பு கொள்ள முடியாது என்றும் இந்த வங்கிகளை அமெரிக்கர்களும் பயன்படுத்த இயலாது என்றும் தெரிவித்துள்ளது. (நி-5)

# ரஷ்யாவில் நிலக்கரி இறக்குமதிக்கு தடை

## ஐரோப்பிய ஒன்றியம் முடிவு

(பிரஸ்ஸல்ஸ்)

ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு பெரும்பாலான நாடுகள் தடை விதித்ததைத் தொடர்ந்து, தற்போது ரஷ்யாவில் இருந்து நிலக்கரி இறக்குமதியை தடை செய்ய ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றிய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் தெரிவிக்கையில், 'நிலக்கரி மீதான தடையால் ஒரு வருடத்திற்கு 4.4 பில்லியன் டொலர்கள் மதிப்புக் கொண்ட வர்த்தகத்தை ரஷ்யா இழக்கும். எனினும் புதிய ஒப்பந்தங்களைத் தடை செய்வதற்கு முன் மூன்று மாத கால அனுமதி வழங்கப்படும். ஒப்பந்தப்படி ஏற்கனவே ரஷ்யா அனுப்பி விட்ட நிலக்கரிக்கும் இந்த தடை பொருந்தாது.

ரஷ்யாவின் எரிபொருளை தடை செய்யும் ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிகளை முன்பு தடுத்த ஜேர்மனி, ரஷ்ய நிலக்கரி தடையை பரிசீலிக்கத் தயாராக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தடை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விவாதித்து வருவதாகவும் தெரிகிறது.

ஜேர்மனி மற்றும் ஹங்கேரி உட்பட பல அரசுகள் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்க தடை விதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

ரஷ்ய எண்ணெயை படிப்படியாக மட்டுமே குறைக்க முடியும் என இந்த நாடுகள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை அடக்க நினைத்ததே அரசின் அழிவிற்கு காரணம்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு நாட்டை ஆட்சி செய்தவர்களின் தவறான சிந்தனையும், ஆக்கபூர்வ திட்டங்கள் இன்றி தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டதுமே காரணமாகும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.**

நாட்டின் இன்றைய நிலை குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை இன்று மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதானது வெறுமனே கடந்த இரண்டு வருடங்களாக நிலவிவரும் கொவிட்-19 மற்றும் ரஷ்ய-உக்ரைன் சண்டையினால் மாத்திரமல்ல. ஜே.ஆர். ஜெயவர்த்தன காலம்தொட்டு மகிந்தராஜபக்ஷ காலம் வரையில், பல்லாயிரம் கோடி ரூபாயினை பல்வேறுபட்ட நாடுகளிடமிருந்து இவர்களால் பெறப்பட்ட கடன்களினால் ஏற்பட்டதாகும்.



சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு, தமிழ் மக்களை அடக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடாமல், மக்களை அழிப்பதற்கும் அவர்களின் அசையும், அசையாச் சொத்துகளை அழிப்பதற்காகவும் எமது சகோதர இனமான சிங்கள இனத்தை தவறாக வழிநடத்தி, பெறப்பட்ட கடன்களே இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமாகும். இதன் காரணமாக வடக்கு-கிழக்கும் மிகப் பெருமளவில் சுடுகாடாக மாற்றப்பட்டது.

வாங்கிய கடன் செலுத்தி முடிக்கப்படாமல் இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இன்று நாட்டில் எந்தவொரு அத்தியாவசியப் பொருளையும் இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை என்ற ஒரு நிலை தோன்றியிருக்கிறது.

இதுவரை வாங்கிய பெருமளவான கடன்கள் அனைத்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக அல்லாமல் அழிவுபூர்வமான நடவடிக்கைகளுக்காகவே வாங்கப்பட்டுள்ளது. ஆகவே இதில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமாக இருந்தால், சரியான பொருளாதாரக் கொள்கைகளும், சரியான வெளிவிவகாரக் கொள்கைகளும் தெளிவான அரசியல் சித்தாந்தத்துடன் வகுக்கப்படவேண்டும் என தெரிவித்தார். (4-5)

# எல்லை தாண்டிய மீன்பிடி 12 மீனவர்களுக்கு பிணை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும் தலா இரண்டு கோடி ரூபாய் காசுப் பிணையில் செல்லுமாறு நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி வழக்கு தவணையிடப்பட்டுள்ளது இதேநேரம் வழமை போன்று இன்றைய தினம் இந்திய துணை துாதரக அதிகாரிகளும் மன்றில் சமூகமாகியிருந்தனர்.

எல்லைதாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 23 ஆம் திகதி இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் 4 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் 12 இந்திய மீனவர்களும் என 16 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-315)

# வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 2142 ஏக்கரில் சிறுபோகம்

(கண்டாவளை)

அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக எதிர்காலத்தில் நோயற்ற வாழ்வுடைய சமூகமொன்றை உருவாக்கும் பொருட்டு விவசாயத்தில் சேதன உரத்தைப் பயன்படுத்தி உரிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு நீர்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடம் வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக 2142 ஏக்கர் இடதுகரையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் விநாயகர்புரம் 700 ஏக்கர், பொன்னகர் 44 ஏக்கர், பூவரசங்குளம் 650 ஏக்கர், கரும்புள்ளியான் 270 ஏக்கர், பாண்டியன்குளம் 478 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் வயற் செய்கைக்கான நீர்ப் பங்கு விநியோகம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதனைவிட முக்கிய தீர்மானமாக இனி வருங்காலங்களில் கண்டமுறையிலும் வாய்க்கால்கள் அடிப்படையிலும் சிறுபோகம் மேற்கொள்ளப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (4-5-315)

# வவுனியாவில் உணவகங்களுக்கு எரிவாயு விநியோகம்



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக வர்த்தக சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உணவங்களுக்கு சமையல் எரிவாயு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எரிவாயு போதியளவு கிடைக்காமையால் சில ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்படும் அபாய நிலையும் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத்தினர் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திரவின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து, எரிவாயு விநியோகஸ்தருடன் கலந்துரையாடியயதுடன் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு எரிவாயுவினை சீராக வழங்குவதற்கு எரிவாயு நிறுவனம் இணங்கியுள்ளது.

இதனடிப்படையில் நேற்றையதினம் ஒரு தொகுதி உணவகங்களுக்கு சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது. (4-5-250)

# முறைப்பாட்டு இலக்கம் அறிமுகம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பொது மக்களுக்கு இயன்றளவு சேவையை வழங்க காத்திருப்பதோடு பொது மக்களிடமிருந்து பெறுமதியான முறைப்பாடுகளை எதிர்பார்க்கின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 021 2290266 தொலைபேசி அழைப்பினூடாக தங்களது முறைப்பாட்டினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மக்கள் வழங்கும் முறைப்பாடுகள் தொடர்பில் இரகசியத்தன்மை பேணப்பட்டு அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-281)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 250 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 350 | 200 | 250 |
| லீக்ஸ் | 120 | 150 | 200 |
| பீற்றூட் | 150 | 130 | 200 |
| கறிமிளகாய் | 180 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 1200 |
| போஞ்சி | 300 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 120 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## பன்னிரண்டில் வந்தது குரு பகவான்; பண விரயங்கள் அதிகரிக்கும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**பிறருக்கு உதவும் பெருந் தன்மையான குணம் படைத்த மேஷ இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 13.4.2022 முதல் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு வருகிறார். இதனை 'பயண ஸ்தானம்' என்றும், 'அயனசயன ஸ்தானம்' என்றும் சொல்வார்கள். இந்த இடத்தில் குரு சஞ்சரிப்பதால் வரவைக்காட்டிலும் செலவு கூடும்.

'எவ்வளவு பணம் வந்தாலும் மறுநிமிடம் செலவாகி விடுகிறதே' என்ற எண்ணம் தோன்றும். இருப்பினும், சுபவிரயங்களைச் செய்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து தப்பிக்கலாம்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

நவக்கிரகங்களில் குருவை 'சுபக்கிரகம்' என்பார்கள். அப்படிப்பட்ட கிரகம் இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கே பலன். சனி இருக்கும் இடத்திற்கு பலன் கொடுப்பார். குரு பார்க்கும் இடத்திற்கு பலன் கொடுப்பார். அந்த அடிப்படையில் குரு பகவான் இருக்கும் இடம், உங்கள் இராசிக்கு விரய ஸ்தானம்.

ஆகையால் வரவு ஒரு மடங்கு என்றால் செலவு இருமடங்காகும். வாழ்க்கைத் தேவைகள் இறுதி நேரத்தில் பூர்த்தியாகும். பழைய கடன்களை அடைக்க வருமானம் வந்தாலும், புதிய கடன் வாங்கும் சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும்.

தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ, ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உருவாகலாம். உறவினர்களுக்கோ மற்றும் உடன்பிறப்புகளுக்கோ திருமணச் செலவுகள், குழந்தை பிறப்புச் செலவுகள், பெண் பிள்ளைகளின் சுபச்சடங்கு செலவுகள், பெற்றோர்களின் மணிவிழாக்கள் என்று பலவிதமாகவும் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

வீடு வாங்கும் அல்லது வீட்டைப் பழுது பார்க்கும் யோகம் உருவாகும். பிள்ளைகளுக்கு நல்ல வேலை கிடைத்து, உதிரி வருமானம் வந்து, குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தும்.

**குருவின் பார்வை பலன்**

மீனத்திற்கு பெயர்ச்சியாகும் குரு, உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களை பார்க்கப் போகிறார். 'குரு பார்க்க கோடி நன்மை' என்பார்கள். அதன் பார்வை பலத்தால் பல நன்மைகள் கிடைக்கும். 4 ஆம் இடத்தைப் பார்ப்பதால், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையைச் சரிவரச் செய்து முடிப்பீர்கள். இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். தாய்வழி ஆதரவு உண்டு. இடம், பூமி சம்பந்தமாக எடுத்த முயற்சி, வாகனம் வாங்கும் முயற்சியில் இருந்த தடை அகலும். பணிபுரிபவர்களுக்கு, கூடுதல் பொறுப்பு வரலாம்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (13.4.2022 முதல் 30.4.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 9, 12 இற்கு அதிபதியானவர் குரு. அவர் பூரட்டாதி நட்சத்திரக் காலில், தன் சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது பாக்கிய ஸ்தானம் பலம்பெறும். இக்காலத்தில் குரு பகவான், செலவிற்கேற்ற வரவைக் கொடுத்துக் கொண்டேயிருப்பார். குடும் பச்சுமை கூடும்.

தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பெற்றோரின் ஆதரவோடு சில பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வீர்கள். திருமண வயதை அடைந்த பிள்ளைகளுக்கு திருமணம் கைகூடும். இடமாற்றம், வீடு மாற்றம்,




பதவி மாற்றம் வரும் நேரம் இது.

**சனி சாரத்தில் குரு சஞ்சாரம் (1.5.2022 முதல் 24.2.2023 வரை)**

உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர், சனிபகவான். அவரது சாரத்தில் உத்திரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சஞ்சரிக்கும்போது, தொழில் வளம் சிறப்பாகும். எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். பங்குச்சந்தை, ரியல் எஸ்டேட், மருத்துவம் சம்பந்தமான தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது ஒரு இனிய காலமாக அமையும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**புதன் சாரத்தில் குரு சஞ்சாரம் (25.2.2023 முதல் 22.4.2023 வரை)**

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதி, புதன். ரேவதி நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும்போது, மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். வழக்குகள் சமாதானத்திற்கு வரும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவர்.

உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் பலம் குறையும். கொடுத்த கடன்கள் வசூலாகி மகிழ்ச்சியைத் தரும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறையும்.

**குரு வக்கிர இயக்கம் (20.7.2022 முதல் 16.11.2022 வரை)**

இக்காலத்தில் குரு பகவான், சனியின் சாரத்தில் சஞ்சரித்து வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே இக்காலத்தில் நிதானமும், பொறுமையும் அவசியம். எதிர்மறைச் சொற்களை தவிர்த்து, நேர்மறைச் சொற்களை பேசுங்கள்.

அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. எனவே சலுகைகள் கிடைப்பது தாமதப்படும். வழிபாட்டின் மூலமே நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**பெண்களுக்கான பலன்கள்**

குருப்பெயர்ச்சியின் விளைவாக பெண்களுக்கு குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை. வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். கூட்டுக் குடும்பத்திலும் பிரச்சினை உண்டு.

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பாராத மாற்றம் வரலாம். அலுவலகத்தில் சகப் பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையும். வியாழன் தோறும் விரதமும், குரு வழிபாடும் நன்மை தரும்.

**வளம் தரும் வழிபாடு**

இந்தக் குருப்பெயர்ச்சியால் இனிய பலன் கிடைக்க, நவக்கிரகத்தில் உள்ள குருவை வழிபடுவதோடு, சிறப்பு வழிபாடாக கற்பக விநாயகர் வழிபாட்டையும் மேற்கொண்டால் வாழ்க்கை வளமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## முகமூடி ஆள்!





(நேற்றைய தொடர்ச்சி)

நான் அவளைக் கொண்டே வீட்டிலுள்ள பணம், நகைகளை எடுத்து வைக்கச் செய்தேன். பிறகு அவளை ஒரு அறையில் தள்ளித் தாளிட்டேன்.

பிறகு நான் ஒரு கடிதம் எழுதி "குள்ள தம்பதிகளே உங்கள் புத்தி சின்னப்புத்தி. திருட்டுத்தொழில் மகா மோசமானது. திருடன் என்று ஒருவன் ஒருமுறை பெயர் வாங்கி விட்டால் அது அழியவே அழியாது.

பயணிகளை ஏமாற்றிப் பணம் பறிக்கும் உங்களை என்னால் அரசாங்கத்திடம் பிடித்துக் கொடுத்துவிட முடியும். உங்களுக்கு திருந்த ஒரு வாய்ப்பு அளிக்கிறேன். உங்கள் வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் காய் கறிகளைப் பயிர் செய்து அவற்றை விற்றுப் பணம் பெற்றுக் கௌரவமாக வாழுங்கள்.

உங்கள் வீட்டில் கிடைத்ததை எல்லாம் ஒரு அநாதை ஆசிரமத்திற்குக் கொடுக்கப்போகிறேன்" என்று முடித்து அதை வெளியில் கிடந்த ஆளின் சட்டைப் பையில் வைத்துவிட்டு வந்தேன்." இதை அவன் தன் மனைவியிடம் கூறி "இப்போது அவர்கள் திருந்தி விட்டார்கள். காய்கறி விற்றுப் பிழைக்கிறார்கள். அதனால் திருப்திப்பட்டே நான் புன்னகை புரிந்தேன்" என்றான்.

அவன் மனைவியும் "உங்களுக்கு அறிவோடு துணிச்சலும் உள்ளது. அவர்களை நீங்கள் திருத்தியதோடு நல்வழிப்படுத்தி விட்டீர்கள்" எனப் பாராட்டினாள். (முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்



65

"அறத்தை நினைத்தாய் இல்லை; அருளையும் நீத்தாய்; முறைமையைத் துறந்தாய்" என்று கூறி இராமன் அடிகளில் விழுந்து வணங்கினான்.

அறத்தைத் தழுவியதுபோல இராமன் பரதனைத் தழுவினான்; அவன் புனைந்த வேடத்தைப் பன் முறை நோக்கினான். "துயருற்ற நிலையில் அயர்ச்சி கொண்டுள்ளாய்; தந்தை வலியனோ?" என்று கேட்டான்.

"ஐயா! நின் பிரிவு என்னும் துயரினால் மெய்யைக் காக்க வேண்டித் தன் மெய்யை விட்டு அவன் மேல் உலகம் சென்றுவிட்டான்" என்றான் பரதன்.

"விண்ணிடை அடைந்தனன்" என்ற சொல் புண்ணிடை நுழைந்த வேல் போல் செவிபுகு முன்னர் கண்ணும், மனமும் சுழல மண்ணிடை விழுந்தான் இராமன், இடியேறு உண்ட நாகம் போல உணர்வு நீங்கினான்.

இராமன் மனங்கலங்கிப் பலவாறு புலம்பினான்; "நந்தா விளக்கனைய நாயகனே! தனி யறத்தின் தாயே! அருள் நிலையே! எந்தாய்! பகை மன்னர்க்குச் சிங்க ஏறு போன்றவனே! நீ இறந்தனையே! இனி வாய்மைக்கு யார் இருக்கிறார்கள்? ஆட்சித் தலைமை இறக்கி வைத்து விட்டு நீ விரும்பிய ஓய்வு இது தானா?! இதுதானா நீ செய்ய நினைத்த தவம்?" என்று கதறினான்.

இராமனை வசிட்டர் தேற்றத் தொடங்கினார்; பரத்துவாசரும், மற்றைய முனிவர்களும், அமைச்சர்களும், அரசர்களும், சேனைகளும் வந்து சூழ்ந்து கொண்டனர். அவர்கள் கூறிய ஆறுதல் மொழிகள் அவலத்தைத் தணித்தன. அவர்கள் இறுதிக் கடனை அவன் செய்கையால் செய்ய வேண்டினர்.

இராமனை [illegible] முழுகினான்; [illegible] படி தருப்பண நீரை எடுத்துவிட்டான்; பின் பர்ணசாலைக்குச் சென்றான். உடன் சென்ற பரதன் சீதையின் கால்களில் விழுந்து அரற்றினான்; சீதை அவனை எடுத்து ஆற்றினாள்.

"நாயகன் என் நெடிய பிரிவினால் துஞ்சினான்" என்று சீதைக்கு இராமன் உரைத்தான்.

அவள் நெஞ்சு திடுக்கிட்டது; நடுங்கினாள்; கண்களில் நீர் வழிந்தது; காட்டுக்குச் சென்ற போதும் துயரம் அடையாத சீதை, தசரதன் இறப்புக்கு மிகவும் வருந்தினாள். அவளை முனி பத்தினிகள் கங்கையில் முழுக வைத்துத் தேற்றித் துயரம் நீக்கி, இராமனிடம் சேர்ப்பித்தனர்.

### இறுதிச் சுற்று

"தந்தை செய்த தவறும் தாய் செய்த கேடும் நீ ஆட்சி ஏற்றால் மாறும்" என்றான் பரதன். "முறை தவறியது என்று குறைபடாதே, குரவர் பணி இது ஆட்சி உனக்கு மாட்சி தரும் தவம் எனக்குத் தக்கது" என்றான் இராமன்.

"சட்டம் பேசுகிறாய்; பேச்சுக்கு ஒப்புக் கொள்கிறேன்; நீ பிறந்த பூமி எனக்கு ஆள உரிமை உடையது என்கிறாய்; அது என்னுடையது தான். அதை உனக்கு வழங்குகிறேன்; மன்னா! நீ மகுடம் சூடுக" என்றான் பரதன்.

"நீ அறிவாளி; என்னை மடக்கி விட்டாய்; ஆட்சியை ஏற்கிறேன். தந்தை எனக்கு இட்ட கட்டளை, "நான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும்" என்பது; "தாழிருஞ் சடைகள் தாங்கிக் கடும் தவம் மேற்கொண்டு பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணிய நதிகள் ஆடித் திரும்பி வருக" என்ற சொல் என்ன ஆகும்? பதினான்கு ஆண்டுகள் பொறுத்துக் கொள்; அதுவரை என் கட்டளை ஏற்று அரசு ஆள்வாய்! இது நான் உனக்கிடும் ஆணை; மறுக்காதே" என்றான் இராமன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
> – அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை தொடர்பில் தேவலோகத்தில் அவசர மாநாடு

*இலங்கையின் சமகால அரசியல் குறித்து தேவலோகத்தில் இந்திரன் தலைமையில் ஓர் அவசர மாநாடு கூடியதாகக் கற்பனை செய்தோம். இதோ அந்தக் கற்பனை.*

*(தேவலோகத்து மாநாட்டில் இந்திரன், கிருஸ்ணன், பிரம்மா, நாரதர், யமன், சித்திரகுப்தன், நந்திதேவர் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்கின்றனர்)*

இலங்கை மண்ணில் ஒவ்வொரு நாளும் மக்கள் போராட்டம் நடந்த வண்ணமுள்ளது.

Gotta Go Home என்ற கோசம் விண்ணை அதிர்ந்து தேவலோகத்தில் ஒலிக்க, இந்திர சபை அதிர்ந்து போனது.

கோட்டா கோ ஹோம் என்ற கோசம் மகா மந்திரம் போல ஒலிக்கிறதே! சங்கதி என்ன? என்று இந்திரன் நாரதரை விசாரிக்க;

நாரதரோ சுவாமி! இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு இலங்கை மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து கோட்டா கோ ஹோம் (Gotta Go Home) என்று கோசம் வைக்கின்றனர். அதன் எதிரொலியே தேவ லோகத்திலும் ஒலிக்கிறது என்றார்.

**இந்திரன்:** அட சங்கதி அப்படியா! அண்மையில்தானே இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. 69 இலட்சம் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்திருந்தனரே. பின்னர் எப்படி?

**சித்திர:** சுவாமி எல்லாம் அந்தச் சிவனின் திருவிளையாடல்

**இந்திரன்:** என்ன அந்தச் சிவனின் திருவிளையாடலா?

**சித்திர:** ஆம் சுவாமி! 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இலங்கை ஆட்சியாளர்கள் யுத்தம் நடத்தி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்தனர்.

இதற்கும் மேலாக, படையினரிடம் சரணடைந்தவர்களை காணாமல் ஆக்கினர். தமிழ் இளைஞர்களைக் கைது செய்து சிறைகளில் அடைத்தனர். இதனால் தமிழ் மண்ணில் குருதியாறு ஓடியது. அப்பாவித் தமிழ் மக்கள் ஆற்றாது அழுதனர். அவர்கள் விட்ட கண்ணீருக்கு சர்வதேசமும் தக்க நீதி வழங்கவில்லை.

இதனால் கோபமடைந்த சிவன் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினார். மகிந்தவை பிரதமராக்கினார்.

**யமன்:** இதென்ன கதை. அப்பாவித் தமிழ் மக்களின் கண்ணீருக்குக் காரணமானவர்களை ஆட்சியில் இருத்துவதா?

**பிரம்மா:** யமதர்மா! அதுதான் சிவனின் திருவிளையாட்டு. இலங்கை ஆட்சியாளர்களை உலக நாடுகளோ ஐ.நா சபையோ தண்டிக்கப் போவதில்லை.

எனவே ஆட்சியில் இருத்தியவர்களைக் கொண்டு அவர்களை ஓட ஓடத் துரத்துவது தான் தக்கபாடம் என்று தக்கனுக்குப் பாடம் புகட்டிய சிவன் கருதினார்.

**இந்திரன்:** இப்போது இலங்கையின் நிலைமை எப்படி இருக்கிறது.

**சித்திர:** சுவாமி காது கொண்டு கேட்க முடியாதளவில் ஜனாதிபதி கோட்டாபய , பிரதமர் மகிந்த, பசில் ஆகியோரை சிங்கள மக்கள் ஏசுகின்றனர் திட்டுகின்றனர். திருடர்கள் என்று கூட ஒரு எம்.பி கூறினார்.

**யமன்:** அப்போ அவர்கள் பதவி விலக வேண்டியதுதானே.

**நாரதர்:** இதுவிடயத்தில் தாங்களும் நடவடிக்கை எடுக்கலாமல்லவா.

**யமன்:** நாரதரே என் கடமை பிரம்மதேவர் எழுதிய விதிப்படியே நடக்கும்.

**கிருஸ்ணன்:** ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது?

**நாரதர்:** ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றை எம்பியான அவர் இந்தக் குழப்பத்தில் பிரதமர் ஆகினால் என்ன என்று நினைக்கிறார் போலும்.

**இந்திரன்:** சரி எதற்கும் ஒரு தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பி வைப்போம் என்று கூற, மாநாடு நிறைவு பெற்றது.

# நிபந்தனையை ஏற்றால் நாங்கள் தயார் சஜித் தரப்பின் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டால், இடைக்கால நிர்வாகத்தில் பங்கேற்க தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டில் இன்று நம்பிக்கையில்லாப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ராஜபக்ஷாக்கள் மீது நம்பிக்கை இன்மை ஏற்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையின்மைப் பிரச்சினைக்கு தீர்வைக் காணாது போனால் பொருளாதார பிரச்சினையை தீர்க்க முடியாது.

இன்னும் இரண்டு வாரங்களில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தவிருக்கும் நிலையில் நாட்டில் நிதியமைச்சர் ஒருவரை நியமிக்காமல் இருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## நாட்டைவிட்டு வெளியேற கப்ராலுக்குத் தடை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி வரை நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அவருக்கு தடை விதித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (நி-5)

## பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் நியாயமானவை
### ரஞ்சன் ராமநாயக்க

(கொழும்பு)

பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் நியாயமானவை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிறை வாழ்க்கை கடினமானது, ஆனால் தற்போது மக்கள் படும் துன்பம் மிகப் பெரியது.

"பொதுமக்களின் எதிர்ப்பு நியாயமானதும் சரியானதுமாகும். எனக்கு அறிக்கைகள் வெளியிட தடை விதிக்கப்பட்டது என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகியதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே ரஞ்சன் ராம நாயக்க இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் விபத்தில் உயிரிழப்பு

தனமல்வில பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

லொறியும் முச்சக்கரவண்டியொன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த பதுளை பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள அதே வேளை, விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** மல்லாகம் நீதிமன்றம், அளவெட்டி, அளுக்கை, ஏழாலை, கணேஸ்வரம், அளவெட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம், மாதனை தெல்லிப்பழை, மல்லாகம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பன்னாலை, துர்க்காபுரம், விக்கிரமாராச்சி பிறைவேற் லிமிற்றட், பலாலி வைத்தியசாலை, டெலிகாம் - சுன்னாகம் ஏழாலை, ஈவினை, கட்டுவன் , கட்டுவன் புலம், கற்பகம்-ஊரெழு, குப்பிளான், குரும்பசிட்டி, மயிலங்காடு, என்.கே திருமண மண்டபம் ஊரெழு பிள்ளையார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், சூறாவத்தை, புகையிரத நிலைய வீதி, மணியம்கடையடி, தோப்பு, வாகையடி, கீரிமலை, கொல்லங்கலட்டி, கீரிமலை கடற்படை முகாம், கீரிமலை கழிவுகள் மறுசுழற்சி நிலையம், மாவை கலட்டி, நகுலேஸ்வரம், வீமன்காமம் தெல்லிப்பழை வைத்தியசாலை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, காங்கேசன்துறை, காங்கேசன்துறை கடற்படை முகாம், காங்கேசன்துறை கப்பற் கூட்டுத்தாபனம், பலாலி விமானப்படை, விமான நிலையம் - பலாலி, பலாலி இராணுவ முகாம், மயிலிட்டி 515 படைப் பிரிவு இராணுவ முகாம், மயிலிட்டி இராணுவ முகாம், மயிலிட்டி மீன்பிடி துறைமுகம், பலாலி விமானப் படை தங்கு விடுதி, விமான நிலைய சந்தி பலாலி, மயிலிட்டி பம்ப் ஹவுஸ், மயிலிட்டி வி.சி, டச்சு வீதி, பலாலி, சாந்தை சந்தி , தையிட்டி வள்ளுவர் புலம் மயிலிட்டி, வசாவிளான்சீனோர்- படகு துறை- காரைநகர், கடற்படைதளம்- காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், ஆலடி இ.போ.ச டிப்போ - காரைநகர், களபூமி, கோவளம், மருதபுரம், காரைநகர் தபால் அலுவலகம் அருகில், பாலக்காடு அம்மன் கோவிலடி - காரைநகர், சிவ்காமி அம்மன் கோவிலடி - காரைநகர், தோப்புக்காடு, ஊரி, வலந்தலை, வியா வில் கருங்காலி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சிதம்பரபுரம் ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து
### செய்தி வெள்ளம்

மறுநாள் மாஹி ஆற்றங்கரையில், குஜராத் ஆச்சிரமத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. வித்யாநகரில் சுருக்கமானதொரு சத்சங்கத்திற்குப் பிறகு, மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஆர்ட் எக்சல் (ART Excel) பயின்ற குழந்தைகள் கூட்டத்தில் குருஜி உரையாற்றினார். சிறார்க்கும் குருஜிக்குமிடையே நிகழ்ந்த நகைச்சுவையும், செயல்நயமும் நிகழ்ந்த ஒருவழி கேள்வி - பதில் அமர்வு (Session) மிகச் சிறப்பாக இருந்தது.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இன்ப துன்பத்திற்குக் காரணம் நாம் செய்த வினைகளேயாகும். ஒருவன் நிந்திப்பானாயின், முற்பிறப்பில் நாம் ஒருவனை நிந்தித்திருப்போம். அவ்வினை இப்போது நம்மை உறுத்தி வந்து ஊட்டுகிறது. நம் வினையை நினைத்து அமைதி அடைய வேண்டும்.

நாம் வெய்யிலிலே, மழையிலே, காட்டிலே, மேட்டிலே அலைகின்ற போது துக்கப்படுகின்றோம். வீட்டிலே வந்து அலைச்சலின்றி அமைதியாயிருக்கின்ற போது சுகப்படுகின்றோம். அது போல் கண்டவாறு மனம் அலைகின்ற போது துக்கமே வரும். அவ்வாறு அலைகின்ற மனத்தை ஒருபுறம் நிறுத்தி வைத்தால் சுகமுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 36

## யாழ்ப்பாண மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி வடமாகாண சபையில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் 16 ஆக இருந்தது. திருத்தச்சட்டம் 2017 பகுதி 3 A (2) இன் படி யாழ்ப்பாண மாவட்டம் 8 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி வடமாகாண சபையில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் 16 ஆக இருந்தது. இதன்படி யாழ்ப்பாண மாவட்டம் 8 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகையிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 72,985 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 583,882 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 72,985 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் 28.11. 2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 6 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 6 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 12 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

பெரும்பாலான பிரேரணைகளின் பரிந்துரைகள் எல்லை நிர்ணயமானது பிரதேச செயலக பிரிவு எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என கூறப்பட்டிருந்தது. மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச்செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததையும், 2017 ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தின் 3(A) (4) (b) பிரிவின் நோக்கத்திற்கு அமையாமல் இருந்ததையும் குழு அவதானித்தது. இதனால் இப் பிரேரணைகளை குழுவால் ஏற்க முடியவில்லை. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணைகளில் உள்ள முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலக பிரிவுகளை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது கருத்தில் எடுத்து சேர்த்துக் கொண்டுள்ளது.

மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரியின் கணிசமான விலகல்கள் வரம்புகளுக்கு உட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) ஏற்க கூடியதாகவும் இருக்கும் வகையில் குழு நடவடிக்கை எடுத்தது.

மூன்று (3) பிரேரணைகள் முஸ்லிம் சமூகத்துக்கு தனி தேர்தல் தொகுதி வேண்டும் என பரிந்துரைத்திருந்தன. இந்த சமூகம் கடந்த காலங்களில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் அங்கு அச்சமூகம் குறைந்த அளவுள்ள எண்ணிக்கை கொண்ட சிறுபான்மை இனமாக உள்ளதை குழு அவதானித்த போதும் முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள் 0.5 % இற்கும் குறைவாக உள்ளதையும் குழு அவதானித்தது. இது ஒரு தேர்தல் தொகுதியை நிர்ணயம் செய்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை.

**மூன்று (3) பிரேரணைகள் முஸ்லிம் சமூகத்துக்கு தனி தேர்தல் தொகுதி வேண்டும் என பரிந்துரைத்திருந்தன. இந்த சமூகம் கடந்த காலங்களில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் அங்கு அச் சமூகம் குறைந்த அளவுள்ள எண்ணிக்கை கொண்ட சிறுபான்மை இனமாக உள்ளதை குழு அவதானித்த போதும் முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள் 0.5 % இற்கும் குறைவாக உள்ளதையும் குழு அவதானித்தது, இது ஒரு தேர்தல் தொகுதியை நிர்ணயம் செய்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை.**

ஒரு சமர்ப்பிப்பு இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை குறிப்பிட்ட ஒரு தேர்தல் தொகுதிக்கு இணைக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது. ஆனால் அவ்வாறு இணைப்பதற்கு போதுமான காரணங்கள் இல்லாமையால் குறிப்பிட்ட சமர்ப்பிப்புகளை கருத்தில் கொள்ள முடியாது என்று குழு தீர்மானித்தது.

ஒரு சமர்ப்பிப்புக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனென்றால் அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாக அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத்தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. இது தேர்தல் தொகுதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட பல பிரேரணைகளுடன் ஒத்துப்போகிறது.

சுருக்கமாகக் கூறினால் 10 பிரதேச செயலகப் பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 2 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 3 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட்டு −9.7% மற்றும் + 5.9% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக் கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து யாழ்ப்பாண மாவட்டம் 8 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அவை வட்டுக்கோட்டை (44), காங்கேசன்துறை (72), உடுப்பிட்டி-அச்சுவேலி (44), பருத்தித்துறை (62), சாவகச்சேரி (62), கோப்பாய்-மானிப்பாய் (32), நல்லூர் (42), யாழ்ப்பாணம்-தீவுகள் (77) ஆகிய தொகுதிகள் ஆகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (M2) இல் காட்டப்பட்டுள்ளது.

**சுருக்கமாகக் கூறினால் 10 பிரதேச செயலகப் பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 2 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 3 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது.,**

**அட்டவணை (M2) - யாழ்ப்பாணம் மாவட்டம்**
**தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்**

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் - தீவுகள் | 322 | 74938 | 1831 | 211 | 77302 |
| வட்டுக்கோட்டை | 153 | 76122 | 13 | 8 | 76296 |
| கோப்பாய் - மானிப்பாய் | 229 | 73722 | 95 | 4 | 74050 |
| நல்லூர் | 311 | 71400 | 54 | 8 | 71773 |
| காங்கேசன்துறை | 645 | 72496 | 48 | 7 | 73196 |
| உடுப்பிட்டி-அச்சுவேலி | 177 | 74478 | 34 | 6 | 74695 |
| சாவகச்சேரி | 157 | 65681 | 63 | 41 | 65942 |
| பருத்தித்துறை | 290 | 70308 | 24 | 6 | 70628 |
| மொத்தம் | 1994 | 508837 | 2138 | 285 | 513254 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள் எதிர்...

பாராளுமன்ற உறுப்பினருமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமையை தாம் புரிந்துகொண்டுள்ளதாகவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் ஏமாற்றம் நியாயமானது என்பதையும் புரிந்துகொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இந்த சூழ்நிலையில் இருந்து எப்படி சிறந்த முறையில் நாட்டை மீட்டெடுப்பது என்பது குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். (ம)

## சனி முதல்...

னால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் ஊடாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 13,14,15,16,17ஆம் திகதிகள் விடுமுறை தினங்கள்.

இதன்மூலம் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 9ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை 9 நாட்கள் விடுமுறை தினங்களாக அமையப் போகின்றது. (ம)

## வட்டுக்கோட்டை...

22) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை துணைவி பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நவாலி பகுதியில் உறவினர் வீடொன்றில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவில் கலந்துகொண்ட பின்னர் இரு இளைஞர்களும் தமது வீடு நோக்கி சென்ற போது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

அதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த மற்றைய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-18,33)

## மணியந்தோட்ட...

தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம், உதயபுரம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த முதலாம் திகதி முதல் காணாமல்போயுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் பணம் கொடுக்கலில் ஈடுபட்டு வருபவர் எனவும், குடும்பம் ஒன்றுக்கு கொடுத்த 3 இலட்ச ரூபாய் பணம் வாங்க சென்றபோதே காணாமல்போயிருந்தார் என விசாரணைக்ளில் தெரிய வந்துள்ளது.

அதன் அடிப்படையில், மணியந்தோட்டம் பகுதியில் குறித்த பெண்ணிடம் பணம் வாங்கிய குடும்பத்தினரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி இருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், பணம் வாங்கிய குடும்பத்தினர், அப்பெண்ணை கொலை செய்து, அவரையும் அவரது மோட்டார் சைக்கிளையும் புதைத்துள்ளனர் எனும் சந்தேகத்தில் குறித்த பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்றில் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, குறித்த வீட்டில் வசித்து வந்த கணவன், மனைவி மற்றும் அவர்களுக்கு உதவிய குற்றத்தில் ஒருவருமாக மூவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் ,முன்னெடுத்துள்ளனர். (ம-18,33)

## நிறைவேற்று...

எப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருட்கள் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "வங்குரோத்தடைந்த சில அரசியல்வாதிகள், தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக மீண்டும் இனவாதத்தையும் மதவாதத்தையும் கையில் எடுத்துள்ளனர்.

இனம், மதம், அரசியல் பேதங்களை மறந்துதான் மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். எனினும், மக்களின் போராட்டத்துக்கு முத்திரை குத்தப்படுகின்றது. எனவே இனவாதத்தையும் மதவாதத்தையும் தோற்றுவிப்பவர்களை, தோற்கடிப்பதற்காக நாம் அறவழியில் எழுந்து நிற்போம்.

இது எமது நாடு, நாட்டு வளங்களை, சொத்துகளை காக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே, தேசிய சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காத வகையிலேயே போராட்டங்கள் இடம்பெற வேண்டும். ஒழுக்கம் உள்ள மக்கள் என்ற வகையில் போராட்டத்தில் பங்கேற்பவர்கள் அதனை பின்பற்றுகின்றனர் என உறுதியாக நம்புகின்றோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை நாம் முன்வைத்துள்ளோம். தனி நபரிடம் அதிகாரம் இருக்கக் கூடாது. சர்வாதிகார ஆட்சியும் வேண்டாம்.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இல்லாதொழிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றார். (ம)

## 'கோட்டா வீட்டு...

எதிர்ப்புக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக பூண்டுலோயா வழியாகவும் நுவரெலியா வழியாகவும் ஹட்டன் வழியாகவும் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் தங்களுடைய எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் தலவாக்கலை நகரை வந்தடைந்தனர்.

அங்கு பிரதான சுற்று வட்டத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போது அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், மயில் வாகனம் உதயகுமார், எம்.வேலுகுமார் ஆகியோருடன் கூட்டம் நடைபெற்ற பிரதான விளையாட்டு மைதானத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றடைந்தனர்.

தொடர்ந்து பிரதான மேடைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ பிரதான மேடையை வந்தடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகியது. மக்கள் முன்னிலையில் சஜித் அங்கு உரையாற்றினார். (ம)

## பல்...

பாதுகாப்பு கடவையை உடைத்து அலரி மாளிகைக்குள் நுழைய மக்கள் முயற்சித்தனர். இதன் போது பொலிஸ் அதிகாரி நபர் ஒருவர் மீது தாக்கியதாக தாக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

"ஏன் என்னை அடித்தீர்கள். ஏன் எனது கன்னத்தில் அறைந்தீர்கள் என குறித்த நபர் கோபத்துடன் கேள்வி கேட்டதுடன் நிலைமை சற்று பதற்றமடைந்தது.

அத்துடன் தங்களைத் தாக்க வேண்டாம் எனவும் நாட்டின் திருடர்களை துரத்தவே இங்கு வந்ததாக குறிப்பிட்டார்.

அப்பகுதியில் பெரும் திரளான மக்கள் விண்ணைப் பிளக்கும் சத்தத்துடன் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கைகளில் தேசியக் கொடிகளுடன் வீதி தடை கம்பங்களில் மேல் ஏறி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பெருமளவு இராணுவத்தினர், பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம)

## அனைவரும்...

புதிய நிர்வாகம், குறைந்தபட்சம் 4 பில்லியன் டொலர்களையாவது கண்டுபிடிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம)

## கோட்டா பதவி...

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார். (ம)

### தன நிதானய
திகதி - 2022.04.07
சீட்டிழுப்பு இலக்கம் - 760
V 06 57 59 79

### மஹஜன சம்பத
திகதி 2022/04/07
சீட்டிழுப்பு இலக்கம் 4730
C 0 8 9 7 7 9

### HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.07
சீட்டிழுப்பு இலக்கம் 039
கடகம் 39 42 46 55 கடகம்

### மெகா பவர்
திகதி 07/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1078
Q 11 01 65 72 79

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1707 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022/04/07 | தினம் வியாழன்
I 08 47 56 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 56,663,148/-

### சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.07
சீட்டிழுப்பு இல: 3868
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,059,760/-
வெற்றி இலக்கங்கள் 18 35 67 75 K

### ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,086,986/-
திகதி 2022-04-07
சீட்டிழுப்பு வாரம் 3419
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 05 18 25 40 கன்னி
9 9 7 5 6 9 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,633,200/-

### 12
O 21 05 14 23 68
883
2022.04.07 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 229,661,167/-

### සංවර්ධන වාසනාව
திகதி: 2022-04-07
வெற்றி வாரம்: 500 வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.10,505,832/-
K 29 17 47 2
ரூ.2,853,760/-
ரூ.10,621,192/-

### அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1533
சீட்டிழுப்பு திகதி: 2022.04.07
ரூ. 4,419,020/-
09 12 48 66 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர்களுக்கு உதவ இந்தியா முன்வர வேண்டும்

## தமிழக முதல்வர் ஜெய்சங்கரிடம் கோரிக்கை



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கு உதவிகளை வழங்க இந்தியா முன்வர வேண்டும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கோரியுள்ளார். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் இடம் பெற்ற தொலைபேசி உரையாடலின்போது அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் உள்ள தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக தமிழகத்திலிருந்து அரிசி, பருப்பு, மருந்து உள்ளிட்ட பொருட்களை அனுப்ப இந்திய மத்திய அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும்.

அந்த உதவிப் பொருட்களை இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

# இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் நியமனம்



இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், நிதி அமைச்சின் புதிய செயலாளராக மஹிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியினால் நேற்று பிற்பகல் வழங்கிவைக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் சிரேஷ்ட பொருளியல் நிபுணர்களில் ஒருவரான நந்தலால் வீரசிங்க, இந்தியப் பொருளாதாரம் பாரிய மந்த நிலைக்கு உள்ளாகிய வேளையில், அதனை நிர்வகிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு தலைமை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 4 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கடந்த 23ம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நான்கு இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களை 07 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று ஊற்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதவான் திருமதி இளங்கோவன் சரோஜினிதேவி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் முன்னிலையாகிய நீரியல் வளத்துறை அதிகாரிகள் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தனர்.

இதற்கமைய குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் ஏப்ரல் 21ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம)

# அனைவரும் இணைந்து பிரச்சினைகளை தீர்க்கவே அமைச்சுப் பதவிகளை துறந்தோம்

## சபையில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



(கொழும்பு)

அனைவரும் இணைந்து நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்த்து முன்னோக்கிச் செல்வதற்காகவே நாங்கள் பதவிகளை துறந்தோம் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு, பால்மா தட்டுப்பாடு, எண்ணை தட்டுப்பாடு என்பன விரைவில் தீர்க்கப்படும். இந்த பிரச்சினைகளை விரைவில் தீர்க்க முடியுமென நாங்கள் நம்புகிறோம்.

நம் நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள். இந்த பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்.

அமைச்சர்கள் பதவி விலகியமை குறித்து அநுர கேள்வி எழுப்புகிறார். எல்லோரும் இணைந்து இந்த பிரச்சினைகளை தீர்த்து முன்னோக்கிச் செல்வதற்காகவே நாங்கள் பதவிகளைத் துறந்தோம்.

அரச தலைவர் பதவிவிலக வேண்டிய அவசியமில்லை. மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வே நமக்கு அவசியம்.

எனவே, போராட்டங்களை திசை திருப்பி 83ஆம் ஆண்டு நடந்தது போன்ற ஒரு நிலையைக்கொண்டுவரவேண்டாம். நாட்டை அழிக்க வேண்டாம். நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார். (ம)


காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 38 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)
- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் – பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்
ஒரு பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும் (300,000)
074 291 3725, 074 291 3726, 074 291 3727
(10945)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-4130)
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777

பல ஆயிரம் கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாணி மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500/-
தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 80 தென்னைகள் உள்ளன.
தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
ஒரு பரப்பின் விலை ரூ.450,000
ஜெயம் - 077 814 7389
077 241 7589
(10944)

யப்பான் சைக்கிள்
அறிவுள்ளோரின் தெரிவு

விலை ரூ 25,000/= இல் இருந்து
1.லேடீஸ் சைக்கிள்கள்
2.ஜென்ஸ் சைக்கிள்கள்
3.கியர் சைக்கிள்கள்
4.மடக்கும் சைக்கிள்கள்
5.பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6.LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்
யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு.
விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)
இலகுவான ஓட்டம். பாட்ஸ் தாராளமாக உண்டு. வருடா வருடம் கழுவிப் பூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை. நீண்டகாலப் பாவனை.
(C-4139)
யப்பான் சைக்கிள்B பசார்
கந்தரோடை றோட், சுன்னாகம்.
(சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.